

# வெகுமதி

எஸ்.ஜெகதீசன்

# வெகுமதி

மதி மயங்கும் கேள்விகள்!

எஸ்.ஜெகதீசன்

*கேள்விக்குள்ளிருக்கும் பயன் பொருளே கேள்விகள்!*

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்
கனடா

# *வெகுமதி*

*கனடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபன வான் பரப்பில் 1997 ம் ஆண்டு முதல் முறையாகவும் 2004 ம் ஆண்டு எவ்வித மாற்றங்களுமின்றி இரண்டாவது தடவையாகவும் ஒலிபரப்பான போட்டி நிகழ்ச்சி இது.*

*2023.02.20 குடும்ப தினத்தில் நூல் வடிவம் பெறுகின்றது.*

இலவசமாக இந் நூலின் மின் நூல் பிரதியை பெற்றுக் கொள்ள விரும்புவோர் S.Jegatheesan75@gmail.com என்ற மின் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்
கனடா

*மாற்றத்தை ஏற்படுத்தினால் தான் முன்னேற முடியும் என்பதைப் புரிந்து கொண்டு புதிய சிந்தனைகளை புகுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.*

*வழக்கமாக செய்கின்ற வேலைகளை மாற்றி செய்வதற்கு முயற்சித்தாலே போதும். மாற்று சிந்தனைகள் மலரத் தொடங்கி விடும்.*

*வாழ்வில் சிக்கல்கள் ஏற்படும் போது அவற்றைத் தீர்க்க முனையும் போது அதற்காக பல மாற்று வழிகளில் சிந்தித்துச் செயல்பட்டால் எந்த சிக்கல்களில் இருந்தும் வெளிப்படலாம்.*

*.....யாரோ!*


முயற்சி
செய்தால்
தொட்டு விடும்
தூரம்தான் வெற்றி.!!

## ***என்னுரை.***

*தெரியும். ஆனால் தெரியாது.*

*அந்த வகையான கேள்விகள்தான் இவை!*

*முன் ஒரு காலத்தில் முதன்முறை நன்றாக ஓடாத திரைப்படங்கள் சிறிது காலத்தின் பின்னர் வெற்றி நடை போட்ட வரலாறு எமக்குத் தெரியும்.*

*கனடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திலும் இப் போட்டி இவ்விதமே அமைந்தது.*

*அர்த்தமில்லா கேள்விகள் போலத்தோன்றும் அர்த்தமுள்ள கேள்விகள் என்றவர்கள் ஒருவர் இருவரல்ல!*

*நாங்களா வெறுத்தோம்? நாங்களா நேசித்தோம்? என இரண்டாம் முறை சொன்னவர்கள் முதலாம் முறைக்காகவும் சிரிக்க வைத்தார்கள்.*

*சொல்லுக்குள் 'மெய்ப்பொருள்' கணாது விஷயமே இல்லை என்றவர்கள் உரைதனை கொஞ்சம் உரசிய பின் அடடா! விஷேசமே உதுக்குள்தான் என்றனர்.*

*கேள்விகள் ரசிக்க வைப்பவையாகவும் பதில்கள் சிந்திக்க வைப்பவையாகவும் அமைந்தன என்ற கருத்துக் கணிப்பும் கேட்டவர் நெஞ்சிலெல்லாம் நிழலாடும்.*

*மூலமும் பொருளும் ஒரு கருத்தையும் பயன்பாடு வேறு ஒரு கருத்தையும் காட்டிடுமா?*

*பிரித்துப் பார்த்தால் எதற்கும் அர்த்தமே வேறுதானா?*

*நினைத்தாலே இனிக்குது மனசு!*

***எஸ்.ஜெகதீசன்***

*பலர் ஒரு கேள்விக்குக் கூட பதில் சொல்லாத போட்டியும் இதுதான்!*

*ஒருவரே பல கேள்விகளுக்குப்* பதில் சொல்லிய போட்டியும் இதுதான்!

***அதுதான் வெகுமதி !***

# 1

## சிவாஜி கணேசன் நடித்த படங்கள் சில

1. இறைவன் ஆணை
2. உறுதியான வெற்றிலைபாக்கு
3. கதைக்கும் கடவுள்
4. கடவுள் புத்திரன்
5. அம்மாவின் சத்தியம்
6. அம்மான் மகனை கண்டீர்களா
7. பகுப்பும் கனியும்
8. கணவன் பற்று
9. கல்லாத அறிஞன்
10. பொம்மை விபரி

# சிவாஜி கணேசன் நடித்த படங்கள் சில

***1..*** இறைவன் என்றால் ஆண்டவன. ஆணை என்றால் கட்டளை.
எனவே இறைவன் ஆணை என்றால் **ஆண்டவன் கட்டளை**

2. உறுதியான என்றால் நிச்சய. வெற்றிலை பாக்கு என்றால் தாம்பூலம்
எனவே உறுதியான வெற்றிலை பாக்கு என்றால் **நிச்சய தாம்பூலம்**

3. கதைக்கும் என்றால் பேசும். கடவுள் என்றால் தெய்வம்.
எனவே கதைக்கும் கடவுள் என்றால் **பேசும் தெய்வம்**

4. கடவுள் என்றால் தெய்வம். புத்திரன் என்றால் மகன்.
எனவே கடவுள் புத்திரன் என்றால் **தெய்வ மகன்**

5. அம்மாவின் என்றால் அன்னையின். சத்தியம் என்றால் ஆணை
எனவே அம்மாவின் சத்தியம் என்றால் **அன்னையின் ஆணை**

6. அம்மான் மகனை என்றால் மச்சானை.கண்டீர்களா என்றால் பார்த்தீர்களா
எனவே அம்மான் மகனை கண்டீர்களா என்றால் **மச்சானை பார்த்தீர்களா**

7. பகுப்பு என்றால் பால். கனி என்றால் பழம்.
எனவே பகுப்பும் கனியும என்றால் **பாலும் பழமும்**

8. கணவன் என்றால் பதி. பற்று என்றால் பக்தி.
எனவே கணவன் பற்று என்றால் **பதிபக்தி**

9. கல்லாத என்றால் படிக்காத. அறிஞன் என்றால் மேதை
எனவே கல்லாத அறிஞன என்றால் **படிக்காத மேதை**

10. பொம்மை என்றால் பாவை. விபரி என்றால் விளக்கு
எனவே பொம்மை விபரி என்றால் **பாவை விளக்கு**

# 2

1. சன்மானத்தில் வரும் அதிக அறிவு எது?

2. இரண்டாவது உறைப்பு சலுகையில் உண்டு

3. தாரகையாய் ஜொலிக்கும் வான் மச்சம்

4. அக்கறை காட்டிடும் கறுப்பு மக்கள்

5. சித்தி தரம் எனின் கரம் சேர்

6. விடையில் தெரியும் வேறு பாஷை

7. நாவாயின் தரிப்பிடத்தில் ஒரு பிரிவு ஒரு வதனம்

8. வைத்தியத்தில் குதிரையும் உறைப்பும்

9. பிரமனிடத்தில் தகப்பனும் மகனும்

10. பாரதியாரிடம் உள்ள பாடல் அழகி

*1.. **உதாரணம்** : சன்மானம் என்றால் அன்பளிப்பு, வெகுமானம் , பரிசு, வெகுமதி என பல்வேவறு அர்த்தங்கள் உண்டு. ஆனால் அதிக = வெகு, அறிவு = மதி, சன்மானம் = வெகுமதி. ஆகவே சன்மானத்தில் வரும் அதிக அறிவு என்பதற்கு **வெகுமதி** என்பதே பொருத்தமான பதிலாகும்.*

*2.. இரண்டாவது = உப, உறைப்பு = காரம் , சலுகை = உபகாரம். ஆகவே இரண்டாவது உறைப்பு சலுகையில் = **உபகாரம்!**.*

*3. வான் = விண் , மச்சம் = மீன் , தாரகை = விண்மீன் ஆகவே தாரகையாய் ஜொலிக்கும் வான் மச்சம் = **விண்மீன்!***

*4. கறுப்பு = கரி, மக்கள் = சனம் , அக்கறை = கரிசனம் ஆகவே அக்கறை காட்டிடும் கறுப்பு மக்கள் = **கரிசனம்!***

*5. கரம் = கை, சேர் = கூடு, சித்தி = கை கூடு ஆகவே சித்தி தரும் எனின் கரம் சேர் = **கை கூடு!***

*6. வேறு = மறு, பாஷை = மொழி, விடை = மறுமொழி ஆகவே விடையில் தெரியும் வேறு பாஷை = **மறுமொழி!***

*7. பிரிவு = துறை, வதனம் = முகம், நாவாயின் தரிப்பிடம் = **துறைமுகம்.** நாவாயின் தரிப்பிடத்தில் ஒரு பிரிவு ஒரு வதனம்*

*8. குதிரை = பரி, உறைப்பு = காரம் , வைத்தியம் = பரிகாரம் ஆகவே வைத்தியத்தில் குதிரையும் உறைப்பும் = **பரிகாரம்!***

*9. தகப்பன் = பிதா, மகன் = மகன் , பிரமன் = பிதாமகன்! ஆகவே பிரமனிடத்தில் தகப்பனும் மகனும் = **பிதாமகன்!***

*10. பாடல் = பா, அழகி = ரதி ஆகவே பாரதியாரிடம் உள்ள பாடல் அழகி = **பா:ரதி!***

# 3

## எம்.ஜி.ஆர் நடித்த படங்கள் சில

1. ஊர்ஊராய்அலையும் அரசன்
2. அம்மாவுக்குஅடுத்தே அகமுடையாள்
3. மகிழ்வான தீபம்
4. பெரிய மனைவி
5. எங்கள் தேசம்
6. விருப்ப வதனம்
7. அமைச்சர் மகள்
8. சோறு தந்தகரம்
9. சீவித்த ஆலயம்
10. மாங்கலிய பேறு

# எம்.ஜி.ஆர் நடித்த படங்கள் சில

1.. ஊர் ஊராய் அலை  நாடோடி அரசன் மன்னன்
ஊர் ஊராய் அலையும் அரசன் **நாடோடி மன்னன்**

2. அம்மாவுக்குஅடுத்தே தாய்க்குப்பின் அகமுடையாள் தாரம்
அம்மாவுக்கு அடுத்தே அகமுடையாள் **தாய்க்கு பின் தாரம்**

3. மகிழ்வான ஆனந்த தீபம் ஜோதி
மகிழ்வான தீபம் **ஆனந்த ஜோதி**

4. பெரிய மகா மனைவி தேவி
பெரிய மனைவி **மகா தேவி**

5. எங்கள் நம் தேசம் நாடு
எங்கள் தேசம் **நம் நாடு**

6. விருப்ப ஆசை வதனம் முகம்
விருப்ப வதனம் **ஆசை முகம்**

7. அமைச்சர்  மந்திரி மகள் குமாரி
அமைச்சர் மகள் **மந்திரி குமாரி**

8. சோறு அன்னம் தந்த கரம் இட்ட கை
சோறு தந்த கரம் **அன்னம் இட்ட கை**

9. சீவித்த குடியிருந்த ஆலயம் கோயில்
சீவித்த ஆலயம் **குடியிருந்த கோயில்**

10. மாங்கலிய தாலி பேறு பாக்கியம்
மாங்கலிய பேறு **தாலி பாக்கியம்**

# 4

1. தின்பண்டத்தில் அதிக உறைப்பு

2. பெரிய ஆபரணத்தால் வரும் பெரும் சிரிப்பு

3. காட்டுக் காயம் தரும் பெருள்

4. ஒரு நாட்டில் பாடும் தேர்

5. கூட்ட உதவும் நறுமணம் பழக்கத்தில்

6. இரண்டாவது அதிஷ்டம் பலனில் உண்டு

7. நிர்வாணத்தை மறைக்கும் அழகிய வாசம்

8. பூவொன்றில் தரச் சொல்லும் ஒரு மிருகம்

9. ஒரு பாடல் ஒரு மாதம் வழியில் தெரியும்

10. பலசாலி காட்டிடும் அதிக ஆகாயம்

*1. . அதிக = பல உறைப்பு = காரம் தின்பண்டம் = பல காரம்*
*தின்பண்டத்தில் அதிக உறைப்பு =* ***பல காரம்***

*2. பெரிய= பெரு ஆபரணம் = நகை பெரும்சிரிப்பு= பெருநகை*
*பெரிய ஆபரணத்தால் வரும் பெரும் சிரிப்பு =* ***பெரு நகை***

*3. காட்டு = கா காயம் = ரணம் பெருள் = காரணம்*
*காட்டுக் காயம் தரும் பெருள்* ***காரணம்***

*4. பாடும் = பா தேர் = ரதம் ஒரு நாடு =பாரதம்*
*ஒரு நாட்டில் பாடும் தேர்* ***பாரதம்***

*5. கூட்ட உதவும் = சக நறுமணம் = வாசம் பழக்கம் = சகவாசம்*
*கூட்ட உதவும் நறுமணம் பழக்கத்தில்* ***சகவாசம்***

*6. இரண்டாவது = உப அதிஷ்டம் =யோகம் பலன் உபயோகம்*
*உண்டு இரண்டாவது அதிட்டம் பலனில் உண்டு* ***உபயோகம்***

*7. அழகிய = அம் வாசம் = மணம் நிர்வாணம் = அம்மணம்*
*நிர்வாணத்தை மறைக்கும் அழகிய வாசம்* ***அம்மணம்***

*8. தரச் சொல்லும் = தா ஒரு மிருகம் =மரை பூ = தாமரை*
*பூவொன்றில் தரச் சொல்லும் ஒரு மிருகம்* ***தாமரை***

*9. ஒரு பாடல் = பா ஒரு மாதம் = தை வழி = பாதை*
*ஒரு பாடல் ஒரு மாதம் வழியில் தெரியும்* ***பாதை***

*10. அதிக = பல ஆகாயம் = வான் பலசாலி = பலவான்*
*பலசாலி காட்டிடும் அதிக ஆகாயம்* ***பலவான்***

# 5

## ஜெமினி கணேசன் நடித்த படங்கள் சில

1. காப்பிய நாயகி
2. மூன்றடியில்வரும் பெடியன்
3. பேறுபெற்ற திருமகள்
4. மலரா சிரமா
5. அடி அர்ப்பணம்
6. இரண்டு வரிகள்
7. பெண்மாளிகை இளைஞன்
8. செல்வம் வாசம்
9. பாரம் சுமப்பது
10. அமைதியான இடம்

# ஜெமினி கணேசன் நடித்த படங்கள் சில

1.. காப்பிய காவிய நாயகி தலைவி
காப்பிய நாயகி **காவிய தலைவி**

2. மூன்றடி யார் பெடியன் பையன்
மூன்றடியில் வரும் பெடியன் **யார் பையன்**

3. பேறுபெற்ற பாக்கிய திருமகள் லட்சுமி
பேறுபெற்ற திருமகள் **பாக்கிய லட்சுமி**

4. மலரா பூவா சிரமா தலையா
மலரா சிரமா **பூவா தலையா**

5. அடி பாத அர்ப்பணம் காணிக்கை
அடி அர்ப்பணம் **பாத காணிக்கை**

6. இரண்டு இரு வரிகள் கோடுகள்
இரண்டு வரிகள் **இரு கோடுகள்**

7. பெண் வஞ்சி மாளிகை கோட்டை இளைஞன் வாலிபன்
பெண் மாளிகை இளைஞன் **வஞ்சிக் கோட்டை வாலிபன்**

8. செல்வம் திரு வாசம் மணம்
செல்வம் வாசம் **திரு மணம்**

9. பாரம் சுமை சுமப்பது தாங்கி
பாரம் சுமப்பது **சுமை தாங்கி**

10. அமைதியான சாந்தி இடம் நிலையம்
அமைதியான இடம் **சாந்தி நிலையம்**

# 6

1. சம்மதத்தில் சேர்ந்து பாட்டுப் படி

2. நியமத்தில் சட்டமும் ஒழுங்கும்

3. நிலச்சுவாந்தார் சிதறிட மூன்று அடி

4.மன உறுதியே பக்கபலம் - பொன் மொழியில்

5. 15 ம் வருடத்தில் சீவியம் என்பது நம்பிக்கை

6. அழகான பெண்களுக்கு கிடைக்கும் பெறுமதி

7. கச்சேரியின் பலன் செய்தியில்

8. மாறு வேடத்தில் மாறியது வேறு வடிவம்

9. பாடும் வட காற்று நில விரிப்பிலும் உண்டு

10. இரண்டாவது நாட்டில் கிடைக்கும் போதனை

*1. சேர்ந்து = உடன் பாட்டுப் படி = பாடு சம்மதம் = உடன்பாடு*
*சம்மதத்தில் சேர்ந்து பாட்டுப் படி* = ***உடன்பாடு***

*2.. சட்டம் = விதி ஒழுங்கு= முறை நியமம் = விதிமுறை*
*நியமத்தில் சட்டமும் ஒழுங்கும்* = ***விதிமுறை***

*3. சிதறு =உடை மூன்று அடி =யார் நிலச்சுவாந்தார் = உடையார்*
*நிலச்சுவாந்தார் சிதறிட மூன்று அடி* = ***உடையார்***

*4. மன உறுதி =துணிவு பக்கபலம் =துணை பொன் மொழி =*
***துணிவே துணை*** *மன உறுதியே பக்கபலம் - பொன் மொழியில்*

*5. 15 ம் வருடம் =விசு சீவியம் = வாசம் நம்பிக்கை =விசு வாசம்*
*15 ம் வருடத்தில் சீவியம் என்பது நம்பிக்கை* = ***விசு வாசம்***

*6. அழகான பெண்களுக்கு கிடைப்பது = சலுகை பெறுமதி= விலை*
*அழகான பெண்களுக்கு கிடைக்கும் பெறுமதி* = ***சலுகை விலை***

*7. கச்சேரி சமா பலன் சாரம் செய்தி சமாசாரம்.*
*கச்சேரியின் பலன் செய்தியில்* ***சமாசாரம்***

*8. வேறு = மாற்றம் வடிவம் = உரு மாறு வேடம் = உரு*
*மாற்றம் மாறு வேடத்தில் மாறியது வேறு வடிவம்* = ***உரு மாற்றம்***

*9. பாடும் = பா வட காற்று = வாடை நில விரிப்பு = பாவாடை*
*பாவாடை பாடும் வட காற்று நில விரிப்பிலும் உண்டு* = ***பாவாடை***

*10. இரண்டாவது = உப நாடு= தேசம் போதனை = உப தேசம்*
*இரண்டாவது சம்மதம் பெற்ற ஆதரவு* = ***உப தேசம்***

# 7

## ரஜனி காந்த் நடித்த படங்கள் சில

1. திரி வதனம்
2. நுதல் விழி
3. அன்னை இல்லம்
4. ஆசிரியர் மாணவன்
5. பாடல் பாடல்
6. கரடு இளவெருது
7. பிழையான சிங்கிகள்
8. புதிய பாடல்
9. அறப் போர்
10. தாய் ஒரு கோயில்

# ரஜனி காந்த் நடித்த படங்கள் சில

1. திரி மூன்று வதனம் முகம்
திரி வதனம் **மூன்று முகம்**

2. நுதல் நெற்றி விழி கண்
நுதல் விழி **நெற்றிக் கண்**

3. அன்னை தாய் இல்லம் வீடு
அன்னை இல்லம் **தாய் வீடு**

4. ஆசிரியர் குரு மாணவன் சிஷ்யன்
ஆசிரியர் மாணவன் **குரு சிஷ்யன்**

5. பாடல் பா பாடல் பா
பாடல் பாடல் **பாபா**

6. கரடு முரட்டு இளவெருது காளை
கரடு இளவெருது **முரட்டுக் காளை**

7. பிழையான தப்புத் சிங்கிகள் தாளங்கள்
பிழையான சிங்கிகள் **தப்புத் தாளங்கள்**

8. புதிய புது பாடல் கவிதை
புதிய பாடல் **புது கவிதை**

9. அறம் தர்மம் போர் யுத்தம்
அறப் போர் **தர்ம யுத்தம்**

10. தாய் அன்னை ஒரு ஓர் கோயில் ஆலயம்
தாய் ஒரு கோயில் **அன்னை ஓர் ஆலயம்**

# 8

1. பெரிய தவிப்பில் உள்ள ஒரு கதாபாத்திரம்

2. சுற்றும் உடலில் கொடை

3. கலப்பற்ற தவத்தின்பலன் மணமகன் தேர்வில்

4. பிறருக்குத் தெரியாத கருத்தில் உட் பொருள்

5. உத்தரம் காட்டிடும் எதிர் சொல்

6. எல்லோருக்கும் உள்ள புத்தி

7. ஆஆஆஆஆஆஆஆஆஆ எனின் சிக்கல்

8. அப்புறம் ஆசை வந்ததா? தொடர்

9. ஒப்பனை பூசிய சிங்க மனைவி

10. சிறு பெண்கள் விருப்பத்தில் மெல்லிய சிரிப்பு

*1. பெரிய மா தவிப்பில் தவி  கதாபாத்திரம் மாதவி*
*பெரிய தவிப்பில் உள்ள ஒரு கதாபாத்திரம்* ***மாதவி***

*2. சுற்றும் உடலில் ரத்தம் கொடை தானம்*
*சுற்றும் உடலில் கொடை* ***ரத்த தானம்***

*3. கலப்பற்ற சுயம் தவத்தின்பலன் வரம் மணமகன் தேர்வில் சுயம்வரம்*
*கலப்பற்ற தவத்தின்பலன் மணமகன் தேர்வில்* ***சுயம் வரம்***

*4. பிறருக்குத் தெரியாத மறை கருத்தில் பொருள் உட் பொருள்*
*மறை பொருள் பிறருக்குத் தெரியாத கருத்தில் உட் பொருள்*
***மறை பொருள்***

*5. உத்தரம் மறு மொழி காட்டிடும் எதிர் மறு சொல் மொழி*
*உத்தரம் காட்டிடும் எதிர் சொல்* ***மறு மொழி***

*6. எல்லோருக்கும் பொது உள்ள புத்தி அறிவு*
*எல்லோருக்கும் உள்ள புத்தி* ***பொது அறிவு***

*7. ஆஆஆஆஆஆஆஆஆஆ எனின் சிக்கல் ஆபத்து*
*ஆஆஆஆஆஆஆஆஆஆ எனின் சிக்கல்* ***ஆபத்து***

*8. அப்புறம் பின் ஆசை பற்று வந்ததா? தொடர் பின் பற்று*
*அப்புறம் ஆசை வந்ததா? தொடர்* ***பின் பற்று***

*9. ஒப்பனை அரி தாரம் பூசிய சிங்க அரி மனைவி தாரம்*
*ஒப்பனை பூசிய சிங்க மனைவி* ***அரிதாரம்***

*10. சிறு குறு பெண்கள் விருப்பத்தில் நகை மெல்லிய சிரிப்பு குறு நகை*
*சிறு பெண்கள் விருப்பத்தில் மெல்லிய சிரிப்பு* ***குறு நகை***

# 9

## கமல்ஹாசன் நடித்த படங்கள் சில

1. ஐந்து உபாயம்
2. திரும்பவும் குயிலா
3. அனைத்துக்கலைகளிலும் கெட்டி
4. ஜெயம் கொண்டாட்டம்
5. கதைக்கும் ஒப்புரு
6. இரத்த வெள்ளம்
7. பெரிய ஆறு
8. காந்தர்வம் விருது
9. அரச நோக்கு
10. முறுவல் வேந்தன்

# கமல்ஹாசன் நடித்த படங்கள் சில

1. ஐந்து பஞ்ச உபாயம் தந்திரம்
ஐந்து உபாயம் **பஞ்ச தந்திரம்**

2. திரும்பவும் மீண்டும் குயிலா கோகிலா
திரும்பவும் குயிலா **மீண்டும் கோகிலா**

3. அனைத்துக்கலைகளிலும் சகலகலா கெட்டி வல்லவன்
அனைத்துக்கலைகளிலும் கெட்டி **சகலகலா வல்லவன்**

4. ஜெயம் வெற்றி கொண்டாட்டம் விழா
ஜெயம் கொண்டாட்டம் **வெற்றி விழா**

5. கதைக்கும் பேசும் ஒப்புரு படம்
கதைக்கும் ஒப்புரு **பேசும் படம்**

6. இரத்த குருதிப் புனல் வெள்ளம்
இரத்த வெள்ளம் **குருதிப் புனல்**

7. பெரிய மகா ஆறு நதி
பெரிய ஆறு **மகா நதி**

8. காந்தர்வம் காதல் விருது பரிசு
காந்தர்வம் விருது **காதல் பரிசு**

9. அரச ராஜ நோக்கு பார்வை
அரச நோக்கு **ராஜ பார்வை**

10. முறுவல் புன்னகை வேந்தன் மன்னன்
முறுவல் வேந்தன் **புன்னகை மன்னன்**

# 10

1. முதல் வகை சரி எனின் எடுத்துக்காட்டு

2. பிறிதொரு தினத்தில் வருவது

3. நடக்கும் விதமும் ஒழுங்கும் வழக்கத்தில் உண்டு

4. இரண்டாவது இடம் பெற்றுள்ள அறிவுரை

5. நிவர்த்தியில் குதிரையும் யானையும்

6. வானத்தில் மானம் பறப்பது இப்படித்தான்

7. பெரிய பொன் யானையாகும்

8. பின்பு யோசனை செய்வது அறிவீனம்

9. மூன்று எஜமான்களை அழைக்கும் பழமொழி

10. நிந்தி - களங்கம் எனின் விடியலின் அறிகுறி

*1. முதல் முன் வகை மாதிரி சரி எனின் எடுத்துக்காட்டு முன்மாதிரி*
*முதல் வகை சரி எனின் எடுத்துக்காட்டு* ***முன் மாதிரி***

*2. பிறிதொரு மறு தினம் நாள் வருவது மறு தினம்*
*பிறிதொரு தினத்தில் வருவது* ***மறு தினம்***

*3. நடக்கும் விதமும் நடை ஒழுங்கும் முறை வழக்கத்தில் உண்டு*
*நடக்கும் விதமும் ஒழுங்கும் வழக்கத்தில் உண்டு* ***நடைமுறை***

*4. இரண்டாவது உப நாடு தேசம் அறிவுரை உப தேசம்*
*இரண்டாவது நாட்டில் அறிவுரை* ***உப தேசம்***

*5. குதிரை பரி யானை கரி நிவர்த்தி பரிகரி நிவர்த்தியில்*
*குதிரையும் யானையும்* ***பரிகரி***

*6. வானம் வி மானம் மானம் பறப்பது இப்படித்தான் விமானம்*
*வானத்தில் மானம் பறப்பது இப்படித்தான* ***விமானம்***

*7. பெரிய மா பொன் தங்கம் யானையாகும் மா தங்கம்*
*பெரிய பொன் யானையாகும்* ***மாதங்கம்***

*8. பின்பு பின் யோசனை புத்திசெய்வது அறிவீனம் பின் புத்தி*
*பின்பு யோசனை செய்வது* ***அறிவீனம்***

*9. மூன்று மூ எஜமான் துரை அழைக்கும் பழமொழி மூதுரை*
*மூன்று எஜமான்களை அழைக்கும் பழமொழி* ***மூதுரை***

*10. நிந்தி வை களங்கம் கறை எனின் விடியலின் அறிகுறி வைகறை*
*நிந்தி - களங்கம் எனின் விடியலின் அறிகுறி* ***வை கறை***

# 11

## சாவித்திரி நடித்த படங்கள் சில

1. அழகுக்கு சீமந்தம்
2. குருதிப் பொட்டு
3. தமையனின் விருப்பம்
4. கீழுலக காளி
5. தோரணை பொறுதி
6. அம்மான் புதல்வி
7. வாணி சூள்
8. எதிர்பாத்திருந்த விழிகள்
9. முத்தமிடும் இசைக்கொலுசு
10. வாஞ்சை பூ

# சாவித்திரி நடித்த படங்கள் சில

1. அழகுக்கு வடிவுக்கு சீமந்தம் வளைகாப்பு
அழகுக்கு சீமந்தம் **வடிவுக்கு வளைகாப்பு**

2. குருதிப் இரத்தத் பொட்டு திலகம்
குருதிப் பொட்டு **இரத்தத் திலகம்**

3. தமையனின் அண்ணாவின் விருப்பம் ஆசை
தமையனின் விருப்பம் **அண்ணாவின் ஆசை**

4. கீழுலக பாதாள காளி பைரவி
கீழுலக காளி **பாதாள பைரவி**

5. தோரணை பாவம் பொறுதி மன்னிப்பு
தோரணை பொறுதி **பாவ மன்னிப்பு**

6. அம்மான் மாமன் புதல்வி மகள்
அம்மான் புதல்வி **மாமன் மகள்**

7. வாணி சரஸ்வதி சூள் சபதம்
வாணி சூள் **சரஸ்வதி சபதம்**

8. எதிர்பாத்திருந்த காத்திருந்த விழிகள் கண்கள்
எதிர்பாத்திருந்த விழிகள் **காத்திருந்த கண்கள்**

9. முத்தமிடும் கொஞ்சும் இசைக்கொலுசு சலங்கை
முத்தமிடும் இசைக்கொலுசு **கொஞ்சும் சலங்கை**

10. வாஞ்சை பாசம் பூ மலர்
வாஞ்சை பூ **பாச மலர்**

# 12

1. அன்னிய வஸ்தில் கடவுள் காட்சியளிப்பார்

2. தங்கத்தின் தரம் காட்டும் சொல் படிப்புடன்

3. மத்திய இடத்தில் பட்சபாதமின்மை

4. ஸ்ரீவதனம் தமிழில் எதிர்பார்க்கும் கடிதம்

5. விழி தோட்டம் எவ்விதம் மேற்பார்வை பெறும்

6. கீறு.கன்னத்தில் அடி.எல்லை வரும்

7. தரச்சொல்வது அறிவை எனின் காலம் தாழ்த்து

8. பாரம் வைக்கப்பட்டால் வரும் கணிப்பு

9. மிகுந்த பாசத்தில் மிகக் கூடுதலான அளவு

10. பெரிய மூன்று இதனைப் போலவே தோன்றும்

*1. அன்னிய பரம் வஸ்தில் பொருள் கடவுள் காட்சியளிப்பார் பரம் பொருள் அன்னிய வஸ்தில் கடவுள் காட்சியளிப்பார்* ***பரம் பொருள்***

*2. தங்கத்தின் தரம் காட்டும் சொல் உரை படிப்புடன் கல் உரை கல் தங்கத்தின் தரம் காட்டும் சொல் படிப்புடன்* ***உரை கல்***

*3. மத்திய நடு இடத்தில் நிலை பட்சபாதமின்மை நடு நிலை மத்திய இடத்தில் பட்சபாதமின்மை* ***நடு நிலை***

*4. ஸ்ரீ திரு வதனம் முகம் தமிழில் எதிர்பார்க்கும் கடிதம் திருமுகம் ஸ்ரீவதனம் தமிழில் எதிர்பார்க்கும் கடிதம்* ***திருமுகம்***

*5. விழி கண் தோட்டம் காணி மேற்பார்வை கண்காணி விழி தோட்டம் எவ்விதம் மேற்பார்வை பெறும்* ***கண்காணி***

*6. கீறு வரை கன்னத்தில் அடி அறை எல்லை வரும் வரை அறை கீறு கன்னத்தில் அடி எல்லை வரும்* ***வரை அறை***

*7. தரச்சொல்வது தா அறிவை மதி எனின் காலம் தாழ்த்து தாமதி தரச்சொல்வது அறிவை எனின் காலம் தாழ்த்து* ***தாமதி***

*8. பாரம் எடை வைக்கப்பட்டால் போடு வரும் கணிப்பு எடை போடு பாரம் வைக்கப்பட்டால் வரும் கணிப்பு* ***எடை போடு***

*9. மிகுந்த அதிக பாசத்தில் பட்சம் மிகக் கூடுதலான அளவு அதிக பட்சம் மிகுந்த பாசத்தில் மிகக் கூடுதலான அளவு* ***அதிக பட்சம்***

*10. பெரிய மா மூன்று திரி இதனைப் போலவே தோன்றும் மாதிரி பெரிய மூன்று இதனைப் போலவே தோன்றும்* ***மாதிரி***

# 13

## பத்மினி நடித்த படங்கள் சில

1. ராஜாதி ராஜன்
2. ஆசான் காணிக்கை
3. சற்குண மகன்
4. விஷ்ணு மாட்சிமை
5. பருவபெண்கள் பொட்டு
6. இறை பிறப்பு
7. திரும்பிய மோட்சம்
8. மறு வாழ்வு
9. பொன் பாவை
10. இரண்டு பூக்கள்

# பத்மினி நடித்த படங்கள் சில

1. ராஜாதி மன்னாதி ராஜன் மன்னன்
ராஜாதி ராஜன் **மன்னாதி மன்னன்**

2. ஆசான் குரு காணிக்கை தட்சணை
ஆசான் காணிக்கை **குரு தட்சணை**

3. சற்குண உத்தம மகன் புத்திரன்
சற்குண மகன் **உத்தம புத்திரன்**

4. விஷ்ணு திருமால் மாட்சிமை பெருமை
விஷ்ணு மாட்சிமை **திருமால் பெருமை**

5. பருவபெண்கள் மங்கையர் பொட்டு திலகம்
பருவபெண்கள் பொட்டு **மங்கையர் திலகம்**

6. இறை தெய்வ பிறப்பு பிறவி
இறை பிறப்பு **தெய்வ பிறவி**

7. திரும்பிய மீண்ட மோட்சம் சொர்க்கம்
திரும்பிய மோட்சம் **மீண்ட சொர்க்கம்**

8. மறு புனர் வாழ்வு ஜென்மம்
மறு வாழ்வு **புனர் ஜென்மம்**

9. பொன் தங்கப் பாவை பதுமை
பொன் பாவை **தங்கப் பதுமை**

10. இரண்டு இரு பூக்கள் மலர்கள்
இரண்டு பூக்கள் **இரு மலர்கள்**

# 14

1. மதிப்பு துல்லியமானதில் வரும் புத்திக் கூர்மை

2. குதிரை வேறு எனின் உணவு வை

3. தொடக்கமும் அடிப்படையும் இறைவனாகும்

4. ஒன்றும் நாலிலொன்றும் சேர சில சமயம்

5. பெரிய கிரயம் தோரணமாய் தொங்கும்

6. விரும்பும் கிரகம் தெரிவது கோரிக்கையில்

7. தரச் சொல்வது சமயத்தில் சுணக்கம்

8. பாதையில் பாடினால் கும்பிடலாம்

9. எந்தக் கரத்தில் செய்யுளின் பொருத்தம்

10. நீக்கு சரிதத்தை என்றால் புதிர்

*1. மதிப்பு மதி துல்லியமானதில் நுட்பம் வரும் புத்திக் கூர்மை மதி நுட்பம் மதிப்பு துல்லியமானதில் வரும் புத்திக் கூர்மை* ***மதி நுட்பம்***

*2. குதிரை பரி வேறு மாறு எனின் உணவு வை பரி மாறு*
*குதிரை வேறு எனின் உணவு வை* ***பரி மாறு***

*3. தொடக்கம் ஆதி அடிப்படை மூலம் இறைவனாகும் ஆதி மூலம்*
*தொடக்கமும் அடிப்படையும் இறைவனாகும்* ***ஆதி மூலம்***

*4. ஒன்று ஒரு நாலிலொன்று கால் சேர சில சமயம் ஒருகால்*
*ஒன்றும் நாலிலொன்றும் சேர சில சமயம்* ***ஒருகால்***

*5. பெரிய மா கிரயம் விலை தோரணமாய் தொங்கும் மாவிலை*
*பெரிய கிரயம் தோரணமாய் தொங்கும்* ***மாவிலை***

*6. விரும்பும் வேண்டு கிரகம் கோள் கோரிக்கை வேண்டு கோள்*
*விரும்பும் கிரகம் தெரிவது கோரிக்கையில்* ***வேண்டு கோள்***

*7. தரச் சொல்வது தா சமயம் மதம் சுணக்கம் தா மதம்*
*தரச் சொல்வது சமயத்தில் சுணக்கம்* ***தா மதம்***

*8. பாதை வழி பாடி பாடு கும்பிடலாம் வழிபாடு*
*பாதையில் பாடினால் கும்பிடலாம்* ***வழிபாடு***

*9. எந்த எது கரம் கை செய்யுளின் பொருத்தம் எதுகை*
*எந்தக் கரத்தில் செய்யுளின் பொருத்தம்* ***எதுகை***

*10. நீக்கு விடு சரிதம் கதை என்றால் புதிர் விடுகதை*
*நீக்கு சரிதத்தை என்றால் புதிர்* ***விடுகதை***

# 15

## சரோஜாதேவி நடித்த படங்கள் சில

1. ராஜ ஆணை
2. இரண்டு பேர் மனம்
3. இன்றுதான் பார்த்த குருவி
4. கமலம் மார்
5. விவாக விருது
6. கர யோகம்
7. காசுத் தோப்பு
8. இறை அன்னை
9. உப்பரிகை சமாதான பறவை
10. எமதில்லப் பெடியன்

# சரோஜாதேவி நடித்த படங்கள் சில

1. ராஜ அரச ஆணை கட்டளை
ராஜ ஆணை **அரச கட்டளை**

2. இரண்டு பேர் இருவர் மனம் உள்ளம்
இரண்டு பேர் மனம் **இருவர் உள்ளம்**

3. இன்றுதான் பார்த்த புதிய குருவி பறவை
இன்றுதான் பார்த்த குருவி **புதிய பறவை**

4. கமலம் தாமரை மார் நெஞ்சம்
கமலம் மார் **தாமரை நெஞ்சம்**

5. விவாக கல்யாண விருது பரிசு
விவாக விருது **கல்யாண பரிசு**

6. கர கை யோகம் ராசி
கர யோகம் **கை ராசி**

7. காசு பணம் தோப்பு தோட்டம்
காசுத் தோப்பு **பணத் தோட்டம்**

8. இறை தெய்வம் அன்னை தாய்
இறை அன்னை **தெய்வத் தாய்**

9. உப்பரிகை மாடம் சமாதான பறவை புறா
உப்பரிகை சமாதான பறவை **மாடப் புறா**

10. எமதில்ல எங்கள் வீட்டுப் பெடியன் பிள்ளை
எமதில்லப் பெடியன் **எங்கள் வீட்டுப் பிள்ளை**

# 16

1. மார்க்கத்தில் உறவு தொடர வருவது நெறி

2. பாட்டும் மூன்றும் இணைந்தால் மதகுரு

3. உலகை ஏசு நல்ல காட்சி காட்டும்

4. பெரிய தேசம் காட்டும் கூட்டம்

5. நகலான உபயோகம் என்பதற்காக கைமாறு

6. தங்கும் மக்கள் காட்சியாக.

7. அஞ்சனம் கொடையாக வெளியில்

8. தண்டனை வழங்கும் கரத்தில் பல்லக்கு

9. பெரிதாய் தரச் சொல்லும் அம்மா

10. பசுவிற்கே மனைவியா எனின் அத்தாட்சி இது

*1. மார்க்கம் வழி  உறவு முறை  நெறி வழி முறை*
*மார்க்கத்தில் உறவு தொடர வருவது நெறி* ***வழி முறை***

*2. பாட்டு பா மூன்று திரி இணைந்தால் மதகுரு பாதிரி*
*பாட்டும் மூன்றும் இணைந்தால் மதகுரு* ***பாதிரி***

*3. உலகம் பார் ஏசு வை நல்ல காட்சி காட்டும் பார்வை*
*உலகை ஏசு நல்ல காட்சி காட்டும்* ***பார்வை***

*4. பெரிய மா தேசம் நாடு காட்டும் கூட்டம்  மா நாடு*
*பெரிய தேசம் காட்டும் கூட்டம்* ***மா நாடு***

*5. நகல் பிரதி உபயோகம் பலன் என்பதில் கைமாறு  பிரதிபலன்*
*நகலான உபயோகம் என்பதற்காக கைமாறு* ***பிரதிபலன்***

*6. தங்கும் தரி மக்கள் சனம் காட்சியாக. தரி சனம்*
*தங்கும் மக்கள் காட்சியாக* ***தரி சனம்***

*7. அஞ்சனம் மை கொடை தானம் வெளி மை தானம்*
*அஞ்சனம் கொடையாக வெளியில்* ***மை தானம்***

*8. தண்டனை வழங்கு தண்டி கரம் கை பல்லக்கு தண்டிகை*
*தண்டனை வழங்கும் கரத்தில் பல்லக்கு* ***தண்டிகை***

*9. பெரிது மா தரச் சொல்லு தா அம்மா மாதா*
*பெரிதாய் தரச் சொல்லும் அம்மா* ***மாதா***

*10. பசு  ஆ  மனைவி தாரம் அத்தாட்சி  ஆதாரம்*
*பசுவிற்கே மனைவியா எனின் அத்தாட்சி  இது* ***ஆதாரம்***

# 17

## அம்பிகா - ராதா நடித்த படங்கள் சில

1. உள்ளம் உரைக்கிறது
2. செம்மையான பின்னோன்
3. நித்திலங்கள் திரி
4. நிராகரி அருகு
5. மூத்த மைந்தன்
6. ஞாபகத் தழும்பு
7. உள்ளத்தில் ஆலயம்
8. மகிழும் கீதம்
9. பெரிய கெட்டிக்காரன்
10. காந்தர்வம் சித்திரம்

# அம்பிகா - ராதா நடித்த படங்கள் சில

1. உள்ளம் இதயம் உரைக்கிறது பேசுகிறது
உள்ளம் உரைக்கிறது **இதயம் பேசுகிறது**

2. செம்மையான நல்ல பின்னோன் தம்பி
செம்மையான பின்னோன் **நல்ல தம்பி**

3. நித்திலங்கள் முத்துக்கள் திரி மூன்று
நித்திலங்கள் திரி **முத்துக்கள் மூன்று**

4. நிராகரி மறு அருகு பக்கம்
நிராகரி அருகு **மறு பக்கம்**

5. மூத்த தலை மைந்தன் மகன்
மூத்த மைந்தன் **தலை மகன்**

6. ஞாபகத் நினைவுச் தழும்பு சின்னம்
ஞாபகத் தழும்பு **நினைவுச் சின்னம்**

7. உள்ளக் இதயக் ஆலயம் கோவில்
உள்ளத்தில் ஆலயம் **இதயக் கோவில்**

8. மகிழும் ஆனந்த கீதம் ராகம்
மகிழும் கீதம் **ஆனந்த ராகம்**

9. பெரிய மா கெட்டிக்காரன் வீரன்
பெரிய கெட்டிக்காரன் **மா வீரன்**

10. காந்தர்வம் காதல் சித்திரம் ஓவியம்
காந்தர்வம் சித்திரம் **காதல் ஓவியம்**

# 18

1. பெரிய பெரிய உறவு

2. பாட்டை எரிப்பது துரோகி

3. கூடும் சிந்தையில் தெரியும் ஒற்றுமை

4. பெரிய ஓட்டையில் பழம்

5. கச்சேரி அன்பளிப்பில் இணக்கம்

6. பெரிதாக ஒரு மிருகம் கடவுளாக

7. சோலையில் அரசன் மன்மதன்

8. பெற்றுக் கொள்ளும் அறிவுக்கு உரிய விலை

9. கவசம் வெற்றிடமாக வீட்டில் தங்காத பெண்

10. அழகிய உழுவை சந்திரனில்

*1. பெரிய மா பெரிய மா உறவு மாமா*
*பெரிய பெரிய உறவு* ***மாமா***

*2. பாட்டை பா எரிப்பது தகி துரோகி பாதகி*
*பாட்டை எரிப்பது துரோகி* ***பாதகி***

*3. கூடும் சேர் சிந்தை மதி தெரியும் ஒற்றுமை சேர்மதி*
*கூடும் சிந்தையில் தெரியும் ஒற்றுமை* ***சேர்மதி***

*4. பெரிய மா ஓட்டை துளை பழம் மாதுளை*
*பெரிய ஓட்டையில் பழம்* ***மாதுளை***

*5. கச்சேரி சமா அன்பளிப்பில் தானம் இணக்கம் சமாதானம்*
*கச்சேரி அன்பளிப்பில் இணக்கம்* ***சமாதானம்***

*6. பெரிதாக ஒரு மிருகம் கடவுளாக*

*7. சோலையில் கா அரசன் மன் மன்மதன் காமன்*
*சோலையில் அரசன் மன்மதன்* ***காமன்***

*8. பெற்றுக் கொள் பெறு அறிவு மதி உரிய விலை பெறுமதி*
*பெற்றுக் கொள்ளும் அறிவுக்கு உரிய விலை* ***பெறுமதி***

*9. கவசம் ஓடு வெற்றிடம் காலி வீட்டில் தங்காத பெண் ஓடு காலி*
*கவசம் வெற்றிடமாக வீட்டில் தங்காத பெண்* ***ஓடு காலி***

*10. அழகிய அம் உழுவை புலி சந்திரனில் அம்புலி*
*அழகிய உழுவை சந்திரனில்* ***அம்புலி***

# 19

## ஸ்ரீ தேவி நடித்த படங்கள் சில

1. திருமண ராகவன்
2. திரி பொட்டலம்
3. பாட்டுக் கோகிலம்
4. கந்தர்வ கீதம்
5. தறுதலை மன்னன்
6. தொடரும் வம்சம்
7. ஜீவிதமே போலி
8. ககூ அகவையிலே
9. அரசனாகாத அரசன்
10. முருகன் கிருபை

# ஸ்ரீ தேவி நடித்த படங்கள் சில

1. திருமண கல்யாண ராகவன் ராமன்
திருமண ராகவன் **கல்யாண ராமன்**

2. திரி மூன்று பொட்டலம் முடிச்சு
திரி பொட்டலம் **மூன்று முடிச்சு**

3. பாட்டுக் கவிக் கோகிலம் குயில்
பாட்டுக் கோகிலம் **கவிக் குயில்**

4. கந்தர்வ தேவ கீதம் ராகம்
கந்தர்வ கீதம் **தேவ ராகம்**

5. தறுதலை போக்கிரி மன்னன் ராஜா
தறுதலை மன்னன் **போக்கிரி ராஜா**

6. தொடரும் அடுத்த வம்சம் வாரிசு
தொடரும் வம்சம் **அடுத்த வாரிசு**

7. ஜீவிதமே வாழ்வே போலி மாயம்
ஜீவிதமே போலி **வாழ்வே மாயம்**

8. கசு 16 அகவையிலே வயதினிலே
கசு அகவையிலே **16 வயதினிலே**

9. அரசனாகாத முடி சூடாத அரசன் மன்னன்
அரசனாகாத அரசன் **முடி சூடா மன்னன்**

10. முருகன் கந்தன் கிருபை கருணை
முருகன் கிருபை **கந்தன் கருணை**

# 20

1.பெரிய ஆறு கங்கையானது

2. அழகிய கரத்தில் தாமரை

3. நிகரான செல்வத்துடன் உறுப்பினர்

4. முரண் உலகை காத்திரு

5. செல்வத்தை கணக்கிடு புரி மணை கிடைக்க

6. பாதையில் பாசையா ஏற்றுக் கொள்

7. வலி தரும் ஒலியுடன் உறைப்பு உணவாகும்

8. புறத்தியான காயுடன் கிழமை எனின் அடிப்படை

9. முஷ்டியால் தாக்கு பின் விபரி இருள் போக்குவாய்

10. பாரம் சிறு வயலில் எனின் வருவது மதிப்பளிப்பு

*1. பெரிய மகா ஆறு நதி கங்கை மகா நதி*
*பெரிய ஆறு கங்கையானது* ***மகா நதி***

*2. அழகிய அம் கரம் புஜம் தாமரை அம்புஜம்*
*அழகிய கரத்தில் தாமரை* ***அம்புஜம்***

*3. நிகரான பிரதி செல்வம் நிதி உறுப்பினர் பிரதிநிதி*
*நிகரான செல்வத்துடன் உறுப்பினர்* ***பிரதிநிதி***

*4. முரண் எதிர் உலகை பார் காத்திரு எதிர்பார்*
*முரண் உலகை காத்திரு* ***எதிர்பார்***

*5. செல்வம் திரு கணக்கிடு கணி புரி மணை திரு கணி*
*செல்வத்தை கணக்கிடு புரி மணை கிடைக்க* ***திரு கணி***

*6. பாதை வழி பாசை மொழி ஏற்றுக் கொள் வழிமொழி*
*பாதையில் பாசையா ஏற்றுக் கொள்* ***வழிமொழி***

*7. வலி தரும் ஒலி ஆ உறைப்பு காரம் உணவு ஆகாரம்*
*வலி தரும் ஒலியுடன் உறைப்பு உணவாகும்* ***ஆகாரம்***

*8. புறத்தியான காய் அத்தி கிழமை வாரம் அடிப்படை அத்திவாரம்*
*புறத்தியான காயுடன் கிழமை எனின் அடிப்படை* ***அத்திவாரம்***

*9. முஷ்டியால்தாக்கு குத்து விபரி விளக்கு இருள் போக்கு குத்து விளக்கு*
*முஷ்டியால் தாக்கு பின் விபரி இருள் போக்குவாய்* ***குத்து விளக்கு***

*10. பாரம் கனம் சிறுவயல் செய் மதிப்பளிப்பு கனம் செய்*
*பாரம் சிறு வயலில் எனின் வருவது மதிப்பளிப்பு* ***கனம் செய்***

முடியும் என்று
தெரிந்தால் முயற்சி எடு...
முடியாது என்று
தெரிந்தால் பயிற்சி எடு....

*வெற்றி நமதே*

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்
கனடா